அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ❂ புரட்டாசி (செப்டம்பர் – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ..... 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ..... 6
3. மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய ஆசி நூல் ..... 11
4. 20.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை முருகப்பெருமான் திருவடியே முக்தி தரும்** ..... 16
5. மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூல் ..... 29
6. ஆவணி மாத பௌர்ணமி விழா ..... 35
7. புரட்டாசி மாத பௌர்ணமி விழா ..... 35
8. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ..... 36
9. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ..... 45

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து
உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

ஆகவே ஆறுமுகனார் சக்தி
அருளும் அனுக்கிரகமும் பெற
யுகத்தார் துறையூர் மண்ணிலுள்ள
உயர் குடிலாம் பிரணவக்குடிலை அணுகி
அணுகி உயிர்காக்கும் தருமமாம்
அருளமுதை உண்டு நன்கு
ஞானமான உபதேசங்களை ஏற்று
ஞானிகளை வணங்கி தீட்சைபெற
தீட்சைபெற தேசிகனார் வழிகளை
தேசமெங்கிலும் பரப்பி வர
தீட்சை பலன் தொண்டின் பலன்
தேசிகன் வழி திருவருள் ஆகி

– மகான் புலிப்பாணிச்சித்தர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# உலக நன்மைக்காக அவதரித்தவர் முருகப்பெருமான்
# சார்வரி வருடம் புரட்டாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. கருணை கடலே கந்தவேலே
காக்கும் சக்தியாய் வந்த வேலே
தருமம் நிலைக்க வகை செய்து
தரணி காத்திடும் ஞானவேலே

2. வேலனே கலியுகம் தன்னில்
வினை அறுக்கும் ஞானகுருவாய்
காலனை வெல்லும் சக்தியாக
கருணை வடிவான அரங்க ஞானியாக

3. ஞானியாக அவதாரம் நிகழ்த்தி
ஞானம் ஆக வழிகாட்டி வருக
ஞானியரின் சக்தியாக வருகின்ற
ஞானத்திருவடி நூலுக்கு சார்வரி நங்கை திங்கள்

4. திங்களுக்கான ஆசி பலன் தன்னை
தேசிகன் கேட்க புலிப்பாணிச்சித்தர் யானும்
இங்கனமே இதுகாலம் உரைப்பேன்
ஏழாம்படை வீடாம் ஓங்காரக்குடில் தன்னில்

5. தன்னிலே முருகப் பெருமானே
தவராஜனே ஆசி தந்தருள
அண்ணலே என வணங்கி தீட்சை
அகிலத்தவர்கள் அணுகி அடைய

6. அடையவே கலியின் துன்பம்
அடையாளம் தெரியா விலகும்
தடையான செயல் முறைகளும்
தகர்த்தெறிந்து வெற்றியாக மாறும்

7. மாறுதலை அருளும் ஞானபீடமாக
மாதவ சக்தி பீடமாக இருக்கும்
ஆறுமுக அரங்கன் படைவீடு
ஆறுமுகனார் ஏழாம்படை வீடாகும்

8. ஆகவே ஆறுமுகனார் சக்தி
அருளும் அனுக்கிரகமும் பெற
யுகத்தார் துறையூர் மண்ணிலுள்ள
உயர் குடிலாம் பிரணவக்குடிலை அணுகி
9. அணுகி உயிர்காக்கும் தருமமாம்
அருளமுதை உண்டு நன்கு
ஞானமான உபதேசங்களை ஏற்று
ஞானிகளை வணங்கி தீட்சைபெற
10. தீட்சைபெற தேசிகனார் வழிகளை
தேசமெங்கிலும் பரப்பி வர
தீட்சை பலன் தொண்டின் பலன்
தேசிகன் வழி திருவருள் ஆகி
11. ஆகியே உலகத்தவர்க்கு காப்பு
ஆறுமுகனார் சக்தியாக வரும்
அகிலமே ஞானபலமாகக் கூடி
ஆற்றல் மிக்க உலகமாற்றம் காணும்
12. மாற்றம் தரும் ஞானசக்தி
மகத்துவமிக்க கடவுள் சக்தி
ஆற்றல் மிக்க கந்தப்பெருமானை
ஆறுமுகப் பெருமான் வழிபாட்டை
13. வழிபாட்டை வள்ளல் நெறியை
வணங்கா அவமதிப்பு செய்பவர்
வழிபாட்டை இழிவு செய்வோர்
வசைபாடி தகாது நடப்பவரெல்லாம்
14. எல்லோரும் தண்டிக்கப்படுவர்
இணையிலா வேலவன் சக்தியால்
இல்லாது போவர் பேரிடரில்
இடைகண்டம் ஆயுள்பங்கம் அடைவர்
15. அடைவரே தீவழி சேர்த்த
ஆஸ்தி பதவி உறவை இழந்து
சோடை போவர் மூடர்களாகி
செத்தும் இழிபிறப்பாக தொடருவர்
16. தொடராது சாபநிலை அகல
தெய்வநெறி காட்டும் அரங்கன்
படைவீட்டை சரணடைந்து
பழுதில்லா முருகப்பெருமான் வழிபாட்டை

17. வழிபாட்டை யாவரும் ஏற்று
வணங்கி சரணடைவு கொண்டு
பழிநேரா பயபக்தி கொள்ள
பணிந்து தானதருமம் தொடர வேண்டும்

18. வேண்டியே ஞானிகள் பூசையுடன்
வேலவன் சக்தியான அரங்கன்
தொண்டுவழி இணைந்து மக்கள்
தொடர்ந்து வருதல் காண

19. காணவே பாதுகாப்பும் கூடி
கலியிடர்கள் யாவும் விலகி
ஞானயுகம் மாற்றம் நடந்தேறி
ஞானபண்டிதன் ஆளுமையாக மாறும்

ஞானத்திருவடி நூலுக்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு புரட்டாசி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் புலிப்பாணிச்சித்தர் அருளிய ஆசி நூலின் சாரம் :

கருணையே வடிவான கருணைக்கடலே, கந்தவேலனே, இவ்வுலகினை காக்கின்ற மகா சக்தியாக வந்துதித்திட்ட வேலவனே, உலகினில் தர்மம் நிலைக்க வழிவகைகள் செய்து தர்மத்தை வளர்த்து தருமபலம் பெருக்கி, இவ்வுலகையே தருமவேலியிட்டு காக்கின்ற ஞானவேலனே, முருகப்பெருமானே இந்த கலியுகத்தில் மக்களின் வினையை போக்கி காக்கின்ற ஞானகுருவாகவும், காலனாகிய மரணத்தையும் வெல்லும் மகாசக்தியாகவும், கருணையே வடிவான ஆறுமுக அரங்கமகா தேசிகராக இவ்வுலகினில் அவதரித்து உலக மக்களுக்கு ஞானவழி காட்டி, வழிநடத்தி வருகின்றபடியினாலே அற்புத மகா ஞானி அரங்கரின் மகா சக்தியாக வெளி வருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு சார்வரி வருடம் புரட்டாசி மாதத்திற்கான ஆசி பலனை ஞானத்திருவடி ஆசி நூலாக புலிப்பாணிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

உலக மாற்றம் செய்திடவே சர்வ வல்லமையுடன் அமைக்கப்பட்ட ஏழாம்படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலில் முருகப்பெருமானே அரங்கன் உருவில் மக்களுக்கு ஆசி தந்து அருள் செய்து வருகின்றார். ஆதலினாலே தவராசன் அரங்கமகான் திருவடி பணிந்து அண்ணலே அரங்கா திருவடி சரணம் என்றே சரணடைந்து அரங்கரிடத்து தீட்சை உபதேசம் பெற்று, அரங்கரின் உபதேசவழி நடந்துவர, அவர்களுக்கு கலியுகத் துன்பம் அடையாளம் தெரியாதவாறு அவர்களை விட்டு விலகி ஓடிடும். தடைபட்ட அவர்களது செயல்களும் தடைகள் விலகி வெற்றி அடையும்.

எல்லா மாற்றங்களையும் தந்தருளும் ஞானபீடமாக உள்ள ஏழாம்படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் இருப்பதினாலே உலக மக்களெல்லாம் முருகப்பெருமானின் சக்தியையும், அருளையும், அனுக்கிரகத்தையும் பெற்றிட வேண்டுமாயின், உயர் ஞானக்குடிலாம் ஏழாம்படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை அணுகி அரங்கன் உயிர் காக்கும் மருந்தாக அளிக்கின்ற ஞானிகளின் அருளாசியைப் பெற்ற குடில் உணவினை உண்டு, அரங்கர் கூறும் ஞானஉபதேசங்களை ஏற்றுக்கொண்டு, அரங்கரின் உபதேச வழி நடந்து தினம்தினம் மறவாமல் ஞானிகளை பூஜை செய்தும் வருவதுடன், அருள்ஞான சற்குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் புகழினை உலகமெங்கும் பரப்பி வருவதுடன் தொண்டுகளை செய்தும் தருமத்திற்கு பொருளுதவிகளை செய்தும் வரவர, அவர்கள் பெற்ற தீட்சை பலனும், செய்த தொண்டின் பலனும் தருமத்தின் பலனும் ஒன்றுகூடி அரங்கமகானின் குருவருளும் கூடி தெய்வத்தின் திருவருளும் கிடைத்து, உலக மக்களுக்கு பாதுகாப்பு முருகப்பெருமானின் அருள் சக்தியாக வந்து பாதுகாக்கும். உலகமெங்கும் மக்களிடையே ஞானம் பெருகி உலகின் ஞானபலம் கூடி இந்த உலகமே ஆற்றல்மிக்க உலகமாக மாறிடும்.

உலகினில் எல்லாவிதமான நல்ல உயர் மாற்றங்களை தந்தருளும் ஞான சக்தியாகிய மகத்துவம்மிக்க கடவுள் சக்தி வடிவான முருகப்பெருமானை வணங்கி ஆற்றல்மிக்க முருகப்பெருமானின் சரவணஜோதி வழிபாட்டை செய்வதுடன் தயவே வடிவான வள்ளல் பெருமானாரின் தூய சன்மார்க்க நெறியினை பின்பற்றி நடந்திட வேண்டும். அவ்வாறின்றி முருகப்பெருமானைப் பற்றியோ, முருகப்பெருமானின் வழிபாட்டையோ, வள்ளல் நெறியினையோ அவமதிப்பு செய்திட்டால், அவமதிப்பு செய்வோர், வழிபாட்டை இழிவு செய்வோர், தூற்றுவோர், தகாது நடப்போர் அனைவரும் முருகப்பெருமானால் தண்டிக்கப்படுவார்கள், ஈடுஇணையற்ற முருகப்பெருமானின் சக்தியினால் அவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள். அவர்களை இயற்கை பேரிடரும், நச்சுக்கிருமிகளும் தாக்கி, அவர்கள் இல்லாமல் அழிந்து போவர், துர்மரணமோடு விபத்தோ நடந்து அகால மரணமடைவர். அவர்கள் அதுவரை தீயவழிகளில் சேர்த்த சொத்துகளை எல்லாம் இழந்து, சொந்தபந்தங்களை, உறவுகளை, நட்புகளை இழந்து வீணாக அழிந்துபோவர். அவர்களது அறிவு மழுங்கி மூடர்களாக ஆகிடுவார்கள். அவர்கள் இந்த பிறவியில் துர்மரணத்தை அடைந்தும், இனி வரும் பிறவிகளிலும் இழி பிறப்பாகத்தான் பிறந்து துன்பம் அனுபவிப்பார்கள்.

இவ்வாறு சாபங்கள் தொடராமல் சாபம் விலகிட வேண்டுமாயின், உலக மக்களெல்லாம் தங்களது வினைகளை அகற்றி கடைத்தேறுவதற்காக மக்களுக்கு தெய்வநெறி புகட்டி, வழி நடத்தி காக்கின்ற முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா ஞானியர் வாழும் ஏழாம்படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை பயபக்தியுடன் வந்து வணங்கி, அரங்கர் திருவடிகளிலே சரணடைந்து தூய ஞான வழிபாடாகிய முருகப்பெருமான் வழிபாட்டினை அனைவரும் உளமார பயபக்தியுடன்

ஏற்று தினம்தினம் மறவாமல் முருகப்பெருமானை வழிபட்டு வருவதுடன், அவரவரின் பாவவினைகள் எல்லாம் விலகிடும் வகையிலே தானதர்மங்களைச் செய்தும் வரவேண்டும். ஞானிகளை பூஜிப்பதோடு மகாஞானி யுகமாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் யுகமாற்ற தானதரும தொண்டுகளிலே கலந்து இணைந்து தளராது தொண்டுகளைச் செய்து வருவதுடன் அரங்கரை பின் தொடர்ந்து வர வேண்டும்.

இவ்விதமே உலகோர் அரங்கமகானை பின் தொடர்ந்து வரவர, கலியுக துன்பமெல்லாம் இவ்வுலகினை விட்டு விலகி, ஞானயுக மாற்றமும் விரைந்து நடந்து உலகமெலாம் ஞானபண்டிதன் தலைமையில் ஞானஆட்சி உருவாகி இவ்வுலகமே ஞானயுகமாக மாறிடும் எனக் கூறுகிறார் மகான் புலிப்பாணிச்சித்தர்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**

**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**

என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.

நமது ஓங்காரக்குடில் சார்பாக தொடர்ந்து 44 வருடங்களாக அன்னதானம் நடைபெறுகிறது. தற்போது, நச்சுக்கிருமி மற்றும் இயற்கை சீற்றங்கள் வராது இருக்க, நமது ஓங்காரக்குடில் சார்பாக அன்னதானம் நடைபெறுகிறது. இந்த அன்னதானத்திற்கு பொருளுதவி செய்ய விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

A/C Name : SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST
A/C NO : 911010045586268
Bank : Axis Bank
Branch : Thuraiyur.621010
IFS Code : UTIB0001272

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
20.02.1988 அன்று அருளிய அருளுரை

# முருகப்பெருமான் திருவடியே முக்தி தரும்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் பிறவிப் பிணியை நீக்கக் கூடிய வல்லமை பெற்றது.

பிறவிப் பிணிக்கு மருந்தாக உள்ள கருத்துகளை சொல்லுகின்ற சங்கம் நமது சங்கமேயாகும்.

நமது சங்கம் பிறவிப்பிணியைப் பற்றி நன்றாக உணர்ந்த சங்கம்.

பிறவிக்கு எது காரணம்? எந்தெந்த கொள்கையை கடைப்பிடித்தால் பிறவிப்பிணி நீங்கும்? என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து சொல்லுகின்ற சங்கமாகும்.

பிறவிப்பிணியைப் பற்றி ஆராய்ந்து, அதற்கு முடிவு காண்பதே நமது சங்கத்தின் நோக்கம்.

அவரவர்களுக்கு பசுமரத்தாணி போன்று மனதில் பதியுமாறு பிறவிப்பிணியைப் பற்றியும், அதை நீக்குவதைப் பற்றியும் சொல்லக் கூடிய ஆற்றல் எங்களுக்கு உண்டு.

படித்து அறிவதற்கு கடினமாக உள்ளவற்றை நாங்கள் அறிந்துள்ளோம். அதை நாங்கள் உங்களுக்கு புரியும்படி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இந்தத் துறையில் நாங்கள் சொல்லுகின்ற கருத்துகள் பூரணமாக உங்களுக்கு புரிகின்றதென்றால், முன் ஜென்மத்தில் நீங்கள் தவம் செய்திருக்க வேண்டும் அல்லது தருமம் செய்திருக்க வேண்டும். இந்த தவமும் தருமமும்தான் உண்மைப் பொருளை உணர்கின்ற பரிபக்குவத்தைத் தரும். இல்லையென்றால் நாங்கள் எத்தனை முறை சொன்னாலும் அதன் உண்மைப்பொருளை உங்களால் உணர முடியாது.

முன் ஜென்மத்தில் பிறப்பைப் பற்றிய இரகசியத்தையும், பிறவித் துன்பத்தைப் பற்றிய உண்மை தன்மையையும் அறிய முற்பட்டவராக இருப்பவர்களே, நாங்கள் சொல்வதை பூரணமாக அறிவார்கள். பிறவிப் பிணியைப் பற்றி முழுமையாக அறிந்திருந்தாலும் அதற்கு அவர்கள் முயற்சி எடுத்திருக்க மாட்டார்கள். அவர்களும் நாங்கள் சொல்லுகின்ற கருத்துகளை கூர்ந்து கவனித்தால் பூரணமாக அறிய முடியும்.

ஆகவே ஒன்றை உணர்ந்தால் மட்டும் போதாது, அதைப் பின்பற்றக் கூடிய பரிபக்குவம் வேண்டும். பரிபக்குவம் இருந்தாலும் பின்பற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

உண்மைப் பொருளைப் பற்றி அறிந்து, உணர்ந்து, தெளிந்து அதை பின்பற்ற முயற்சிக்காவிட்டால் அவர்களும் சாதாரண மக்கள் போன்று ஆவார்கள். நாங்கள் பேசுவதை கேட்டால் மட்டும் போதாது, கேட்டு பின்பற்ற வேண்டும்.

பின்பற்ற வேண்டுமென்று ஆசைப்படுகின்ற மக்கள், ஆன்மாவைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். ஆன்மாவைப் பற்றி அறிந்தவன் நிச்சயம் உடம்பைப் பற்றி அறிந்திருப்பான். உடம்பைப் பற்றி அறிந்தவன் நிச்சயம் ஆன்மாவைப் பற்றி அறிந்திருப்பான். இந்தத் துறைக்கு வருகின்றவர்கள் ஆன்மாவைப் பற்றி பூரணமாக அறிந்திருக்க வேண்டும்.

உண்மைப் பொருளை அறிந்த மக்கள், ஆன்மாவைப் பற்றி பூரணமாக அறிந்திருப்பார்கள். தேகத்தின் இழிவுத் தன்மையை உணர்ந்தால், ஆன்மாவைப் பற்றி அறியலாம். ஆன்மா மாசற்றது. ஆனால் மாசுள்ள தேகத்தில் தங்கும்போது, ஆன்மா மாசுபடுகிறது.

ஆசான் சுப்பிரமணியர், ஆசான் அகத்தியர், மகான் திருமூலதேவர், மகான் போகமகாரிஷி போன்ற ஞானிகள் தவமுயற்சியால் ஆன்மாவை தூய்மைப்படுத்துவதற்காக தேகத்தை தூய்மைப்படுத்துகிறார்கள். தேகத்திலுள்ள மாசை நீக்குவது என்பது கடினமான ஒன்று.

மந்திரத்தாலோ, ஆரவார பூஜைகளாலோ தேகத்திலுள்ள மாசை நீக்க முடியாது. பிறவித் துன்பத்தை ஒழிக்கின்ற மக்கள் இதுபோன்ற மந்திரங்களை சொல்லுதல், ஆரவார பூஜைகள் செய்தல் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது. மந்திரத்தை சொல்லி பூஜை செய்கின்றவர்களின் பிறவித் துன்பத்தை அது நீக்கவில்லை. அந்த மந்திரத்தை காதில் கேட்பவர்களுடைய பிறவித்துன்பத்தையும் நீக்கவில்லை.

ஆரவார பூஜைகளுக்கும், மந்திரத்திற்கும் அப்பாற்பட்ட உண்மைப் பொருள் உண்டு. அதை அறிந்தவர்கள்தான் பிறவித்துன்பத்தை ஒழித்தார்கள்.

பிறவித் துன்பத்தை ஒழித்தவர்களே, ஆன்மாவைப் பற்றி அறிந்த மக்கள்.

**வேதமோது வேலையோ வீணதாகும் பாரிலே**
**காதகாத தூரமோடிக் காதல்பூசை வேணுமோ**
**ஆதிநாதன் வெண்ணையுண்ட அவனிருக்க நம்முளே**
**கோதுபூசை வேதமேது குறித்துப்பாரு மும்முளே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 527.**

வாக்கியம் சிவவாக்கியம். சிவவாக்கியர் அருளிய கவிகள் அனைத்தும் சிவபெருமான் அருளியவை. அத்தனையும் முத்துக்கள். அத்தனையும் பிறவிப்பிணியை ஒழிக்கக் கூடிய மாபெரும் மருந்துகள். வீண் ஆரவார பூஜைகள் பிறவிப்பிணியை நீக்காது என்பதை **வீணதாகும் பாரிலே** என்று அவர் சொல்கிறார்.

மகான் சிவவாக்கியர் ஆன்மாவைப் பற்றி அறிந்த மாமேதை. ஞானிகள் அனைவரும் ஆன்மாவைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள். ஆன்மாவில் உள்ள மாசு நீக்கப்பட வேண்டும். ஆன்மாவிலுள்ள மாசை நீக்குவதற்கு, உடல் மாசை நீக்க வேண்டும்.

உடல் மாசை நீக்குவதற்கு வாசிப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பயிற்சி என்கிற இரகசியத்தை அறிந்தாலன்றி, நிச்சயமாக ஆன்மாவைப் பற்றியுள்ள மாசு நீங்காது. மூச்சுக்காற்றைப் பற்றிய இரகசியத்தை அறிந்த மக்கள்தான் பிறவிப்பிணியை நீக்க முடியும். மகான் சிவவாக்கியர் பிறவித்துன்பத்தை நீக்கியவர், பல கோடி ஆண்டுகளை ஒரு நொடிப்பொழுதாக வாழக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்.

ஒருவன் தன்னை அறிந்து, தன்னுள் இயங்கக் கூடிய ஆன்மாவைப் பற்றி அறிய வேண்டும். இதற்கு ஞானிகளை அந்தரங்கமாக பூஜை செய்ய வேண்டும். ஆன்மா வசப்பட பாடுபடுவதே உண்மையான காயசித்தி ஆகும்.

**காதகாத தூரமோடிக் காதல்பூசை வேணுமோ –** இறைவனிடம் செலுத்தும் உண்மையான அன்பை அந்த தெய்வீகத் தன்மையை இங்கே காதல் என்கிறார். காதம் என்பது பத்து மைல். இங்கே காதகாதம் என்றால் நூறு மைல் ஆகும். பல ஊர்களுக்கு பல தலங்களுக்கு பல நூறு மைல் கடந்து செல்வதெல்லாம் உண்மையான ஆன்மீகம் அல்ல.

எந்த துன்பம் வந்தாலும், எத்தனை இடையூறு வந்தாலும், என்ன வறுமை வந்தாலும், தினமும் விடாது ஞானிகளை பூஜை செய்ய வேண்டும். நாட்களை வீணாக்காமல் இப்படி தினமும் பூஜை செய்ய வேண்டும். இதுவே உண்மை ஆன்மீகம். எத்தனை துன்பங்கள் வந்தாலும் பூஜையை விட்டுவிடக் கூடாது. ஞானிகளை உள்ளம் உருக பூஜித்தாலன்றி, பிறவித்துன்பத்தை ஒழிக்க முடியாது.

**ஆதிநாதன் வெண்ணையுண்ட அவனிருக்க நம்முளே** – ஆதிநாதன் என்று சொல்லப்பட்ட பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் போன்ற தெய்வங்கள் நம்முள்ளே இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து, பல நூறு மைல்கள் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் அமர்ந்து ஞானிகளை பூஜை செய்ய வேண்டும். ஞானிகளின் பாதத்தைப் பற்றுவதுதான் தவம்.

ஞானிகள் அனைவரும் தினசரி உள்ளம் உருக பூஜித்துதான் சித்தி பெற்றிருக்கிறார்கள். ஞானிகள் நாட்களை வீணாக்காமல் பூஜை செய்த மக்கள். இதுபோன்று சித்தி பெற்ற மக்கள் சொல்லுகின்ற கருத்துகளைத்தான் நாம் பின்பற்ற வேண்டும்.

எங்கே தூய சிந்தை, எங்கே உண்மைப் பொருள் அறிந்த அறிவு இருக்கின்றதோ அங்கே இறைவன் இருக்கிறார் என்பது ஞானிகளின் வாக்கு ஆகும். ஆகவே எல்லா தெய்வங்களும் நம்முள் இருக்கின்றன. இந்த கருத்துகளை உணர்ந்த மக்கள் பிறவித்துன்பத்தை நீக்கிக் கொள்வார்கள்.

தன்னை அறிந்தவன் தன்னுள்ளே இருக்கின்ற ஆன்மாவைப் பற்றி அறிகிறான். அந்த ஆன்மா வசப்படுவதற்கு வாசிப்பயிற்சியை மேற்கொள்கிறான். உறுதிப்பொருளாகிய மெய்ப்பொருளை அறிய உறுதியோடு பாடுபட வேண்டும். ஞானவாழ்வை தரும் வாசிப்பயிற்சியை மேற்கொள்வதற்கு உறுதியாக இருக்க வேண்டும். அதேசமயத்தில் உணர்ந்த பொருளை, தெளிந்த ஒன்றை, உணர்ந்து தெளிந்து ஆராய்ந்து முடிவெடுத்த ஒன்றை கைவசப்படுத்துவதற்கு உறுதியோடு நின்று செயல்பட வேண்டும்.

ஆன்மாவைப் பற்றி அறிந்த மக்கள், உடம்பிலுள்ள மாசை நீக்குகிறார்கள்.

**எப்பிறப்பி லும்பிறந் திறந்தழிந்த ஏழைகாள்**
**இப்பிறப் பிலும்பிறந் தென்னநீறு பூசுறீர்**
**அப்புடன் மலமறுத்தே ஆசைநீக்க வல்லிரேல்**
**செப்புநாத வோசையிற் றெளிந்துகாண லாகுமே.**

– மகான் சிவவாக்கியர் – கவி எண் 423.

**எப்பிறப்பி லும்பிறந் திறந்தழிந்த ஏழைகாள்** – தெளிவான அறிவு என்பது சிறந்த செல்வம். அது இல்லாத மக்களை ஏழைகள் என்று சொல்கிறார். கோடிக்கணக்கான செல்வம் இருந்தும் பிறவித் துன்பத்தை ஒழிக்கக் கூடிய அறிவு இல்லாதவனைப் பார்த்து ஏழை என்று சொல்கிறார். எமனை எவன் வெல்லுகின்றானோ, அவன்தான் உண்மையான செல்வத்தை பெற்றவன். அந்த அறிவுச் செல்வம் இல்லையென்றால் அவனை ஏழை என்கிறார்.

**எப்பிறப்பி லும்பிறந் திறந்தழிந்த ஏழைகாள்** – எப்பிறப்பிலும் என்று சொல்கிறார். ஊர்வன, கிடப்பன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன என்று சொல்லப்பட்ட

ஏழுவகையான தோற்றம் கொண்ட பிறவிகளை எடுத்து எடுத்து இறந்தேன் என்கிறார். இத்தனை தோற்றத்திலும், பல வகையான பிறப்புகளும் பிறந்து பிறந்து இறந்தேன் என்கிறார்.

**அப்புடன் மலமறுத்தே ஆசைநீக்க வல்லிரேல்** – அப்பு என்பது சுக்கிலம். ஆசைக்கு காரணம் சுக்கிலம். மல, ஜல, சுக்கிலத்தை மும்மலம் என்று சொல்வார்கள்.

**செப்புநாத வோசையிற் றெளிந்துகாண லாகுமே** – இதை அறிந்து திருநீறு பூசினால் அது அளவிலாத பெருமையைத் தரும். இந்தப் பொருளை அறிந்தவன் திருநீறு கொடுத்தால், அது பிறவிப்பிணிக்கு மருந்தாகும்.

**போடுவது திலதமடா மூலர் மைந்தர்**
**போகர் கருவூராரைத் தியானம் பண்ணு**
**நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து**
**நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா**
**ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று**
**எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை**
**தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்**
**செப்பாதே இக்கருவை (ரகசியத்தை) உலகத்தோர்க்கே.**

**– மகான் சட்டைமுனிநாதர் – ஞானவிளக்கம் 51 – கவி எண் 21.**

நாம் நெற்றியில் விபூதி இடும்போது திருமூலதேவா, அகத்தீசா, நந்தீசா, போகமகாரிஷி, காலாங்கிநாதா என்று சொல்ல வேண்டும்.

**அப்புடன் மலமறுத்தே ஆசைநீக்க வல்லிரேல்** – அப்பு என்பது மல, ஜல, சுக்கிலம். இதை நீக்கக் கூடிய ஆற்றல் பெற்ற மக்கள் விபூதி வைத்தால் அதற்கு தனி மதிப்பு உண்டு. அவர்கள் கையில் இருந்து விபூதி வாங்கினால், அது தனி தன்மையுள்ளது.

**செப்புநாத வோசையிற் றெளிந்துகாண லாகுமே** – ஞானிகளின் துணையைக் கொண்டு யோகிகள் வாசியை வசப்படுத்துகிறார்கள். வாசி என்பது மூச்சுக்காற்று, வாசியைப் வசப்படுத்துதல் என்பது பிராணாயாமம். இடகலையும் பிங்கலையும் ஒன்றுபடும்போது, மூச்சுக்காற்று உந்திக்கமலத்தில் தங்கும். அப்படி தங்கிய அந்த வினாடியே தசநாதம் கேட்கும், ஓங்கார ரீங்காரம் கேட்கும்.

ஓங்கார ரீங்காரம் இவர்கள் தூங்கினாலும் அது தூங்காது, ஒலித்துக் கொண்டே இருக்கும். அந்த ஓசையே இவர்களுக்கு பல பாஷையை தெளிவுப்படுத்தும். அந்த ஓசையை கேட்கின்ற மக்கள், இந்த உலகத்தில் அனைத்து கல்வியையும் கற்றவர்களாவார்கள். அந்த ஓசையை கேட்கின்ற மக்கள் அனைத்தையும் கற்றவர்கள், இனி கற்பதற்கு இவ்வுலகில் ஒன்றுமில்லை.

**செப்புநாத வோசையிற் றெளிந்துகாண லாகுமே –** இந்த ஓசையை காதால் கேட்கின்ற மக்கள்தான் ஆசையை ஒழிக்க முடியும். அதற்குதான் நாம் பாடுபட வேண்டும்.

**காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான**
**ஊற்றைச் சடலத்தை யுண்டென் றிறுமாந்து**
**பார்த்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்**
**ஆற்றுவெள்ளம் போல அளாவினையே நெஞ்சமே.**

**– மகான் பட்டினத்தார் – நெஞ்சொடு புலம்பல் – கவி எண் 16.**

**காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான –** அந்தக் காலத்தில் கொல்லன் பட்டறையில் காற்றுத் துருத்தியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். காற்றுத் துருத்தியுடன் கூடிய தோல்பையை விரிக்கும்போது காற்றை உள்ளே இழுத்து உப்பும், அதை அழுத்தும்போது காற்றை வெளியே தள்ளி சுருங்கும். இந்த உடம்பு காற்று துருத்தியைப் போன்றது என்கிறார்.

**காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான ஊற்றைச் சடலத்தை யுண்டென் றிறுமாந்து –** எல்லா வினைகளுக்கும் காரணமானது இந்த உடம்பு. இந்த தேகத்தை நிலையானது என்று இறுமாந்து பெருமிதத்தோடு இவ்வுலகத்தார் இருக்கிறார்கள். இந்த உடம்பு நீடித்து இருக்குமென்று பெருமிதத்தோடு இருக்கிறார்கள். உடம்பின் இழிவைப் பற்றி அவர்கள் அறியவில்லை.

**பார்த்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல் ஆற்றுவெள்ளம் போல அளாவினையே நெஞ்சமே –** பார்த்து என்றால் ஆராய்ந்துப் பார்த்து, சிந்தித்துப் பார்த்து, பிறவித் தன்மையைப் பார்த்து, ஆன்மாவைப் பார்த்து, உடலைப் பார்த்து, உலகத்தை உற்றுப் பார்த்து, தெளிவாகப் பார்த்து என்று அர்த்தம். ஆகவே பார்த்து என்பதற்கு இவ்வளவு பொருள் உண்டு, பல இரகசியம் உண்டு. இப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒருவன் நடந்து வரும்போது, அவனுடைய கண் இருண்டு இருக்கிறதே, கண் பஞ்சடைந்து போயிருக்கிறதே, சோர்வாக இருக்கிறானே இவன் நிச்சயமாக சாப்பிட்டிருக்க மாட்டான் என்பதை உணர்ந்து தன்னுடைய வீட்டில் இருந்து உணவு கொடுக்க வேண்டும் அல்லது யார் மூலமாகவோ இவனுடைய பசியை தீர்க்க வேண்டும். இந்த உணர்வு இருக்கின்ற மக்கள்தான் பிறவித்துன்பத்தை நீக்க முடியும். இந்த உணர்வுள்ள மக்கள்தான் பிரணவத்தை காதால் கேட்க முடியும்.

ஓங்கார பிரணவத்தை காதால் கேட்கக் கூடிய மக்களுக்குத்தான், ஒரு கோடி வேத மந்திரங்களை ஒரு நொடிப்பொழுதில் கற்கக் கூடிய ஆற்றல் உண்டு. பசியோடு இருக்கிறான் என்பதை குறிப்பால் உணர்ந்து பசியாற்றுகின்ற

மக்களுக்குத்தான் இந்த ஆற்றல் கிடைக்கும். ஒருவனுடைய தோற்றத்தை பார்க்கும்போதே, இவன் பசியோடு இருக்கிறான் என்பதை உணர்கிறான்.

சிலபேர் வெற்றிலைப்பாக்கு போட்டுக் கொண்டு சாப்பிட்டவன் போன்று அமர்ந்திருப்பான். ஆனால் அவனுடைய முகத்தைப் பார்க்கும்போதே நிச்சயம் சாப்பிடவில்லை என்பதை இவன் அறிவான். வெற்றிலைபாக்கு போட்டுக் கொண்டு சாப்பிட்டது போன்று நடிக்கிறான் என்பதை அவனை பார்த்தவுடன் தெரிந்து கொள்வான். அவனுடைய தோற்றத்தைக் கண்டு நிச்சயம் சாப்பிட்டிருக்க மாட்டான் என்பதை தெரிந்து கொள்வான். ஒருவனுடைய தோற்றத்தைப் பார்த்து முடிவெடுத்து, அவனுடைய பசியை உணர்ந்து, அவனுக்கு உணவு தருவான். இந்த உணர்வுதான் ஓங்காரத்தை எழுப்பக் கூடியது.

இந்த உணர்வு எங்கு இல்லையோ, அங்கு ஓங்காரம் என்கிற பிரணவத்தை அறியவே முடியாது.

**பார்த்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்** – ஈகை தன்மை இல்லாத மக்கள் ஒன்றையும் அறிய முடியாது.

**ஆற்றுவெள்ளம் போல அளாவினையே நெஞ்சமே** – இந்த உடம்பை உண்மையென்று நம்பி, இந்தப் பொருளை உறுதியென்று நம்பி கடைசி காலத்தில் ஆற்றுவெள்ளம் போல தடுமாறுவார்கள். ஆற்று வெள்ளம் நிலை கொள்ளாது அலை மோதும். அதுபோன்று இவர்கள் வாழ்க்கையில் அலைமோதுகிறார்கள் என்று மகான் பட்டினத்தார் சொல்கிறார். மகான் பட்டினத்தார் ஓங்கார ஓசையைக் கேட்டவர், பிரணவத்தை அறிந்தவர்.

உங்கள் மீது கருணை கொண்டு அவர்கள் இந்த பாதையை சுட்டிக் காட்டுகிறார்கள். கருணையில்லையென்றால் நிச்சயமாக பிரணவத்தை அறிய முடியாது. பிரணவத்தை அறியாமல் என்ன பூசித்து என்ன பயன்? என்கிறார். கருணை சிந்தையைப் பற்றி பேசுவதே உண்மையான மார்க்கமாகும்.

**நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சயமென் றேயெண்ணிப்**
**பாக்களவாம் அன்னம் பசித்தோர்க் களியாமல்**
**போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது**
**ஆர்ப்படுவா ரென்றே யறிந்திலையே நெஞ்சமே.**

**– மகான் பட்டினத்தார் – நெஞ்சொடு புலம்பல் – கவி எண் 17.**

**காற்றுத் துருத்தி** என்று உடம்பைப் பற்றி அங்கே சொல்கிறார். ஆனால் இங்கே **நீர்க்குமிழி** என்கிறார்.

கிணற்றின் அடியில் உள்ள வெப்பத்தால் காற்று உண்டாகி அது நீர்க்குமிழியாக மாறி நீர்ப்பரப்பின் மேல்நோக்கி வரும். மேலே வந்தவுடன் அந்த நீர்க்குமிழி எந்தக் காரணத்தை முன்னிட்டும் அப்படியே நிற்காது. அந்த

நீர்க்குமிழி தோன்றிய உடனே அழிந்துவிடும். நீரின் கீழே இருந்து வரும்போது, ரூபமாக இருக்கும். நீர்ப்பரப்பின் மேலே வந்த உடன், அந்த நீர்க்குமிழி உடைந்து ரூபமற்றுப் போகும். ஆகவே இந்த உடம்பை நீர்க்குமிழிக்கு ஒப்பிடுகிறார்.

**நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சயமென் றேயெண்ணி** – இந்த உடம்பு அநித்தியமானது.

**பாக்களவாம் அன்னம் பசித்தோர்க் களியாமல்** – பாக்களவு என்கிற சிறிதளவாவது பசித்தோர்க்கு நீங்கள் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

**போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது ஆர்ப்படுவா ரென்றே யறிந்திலையே நெஞ்சமே** – பாக்களவாவது பசித்தோர்க்கு கொடுத்தால்தான் ஒரு மனிதன் எமனை வெல்ல முடியும். தனக்கு வந்த பொருளை சிறிதளவாவது பிறருக்கு கொடுக்கின்ற மனம் உள்ள மக்கள்தான் பிரணவத்தை அறிய முடியும். இவர்கள்தான் சித்தி பெற முடியும்.

இதுபோன்ற கருணை சிந்தையுள்ள மக்கள்தான் பிரணவத்தை அறிந்து பிறவித் துன்பத்தை ஒழிக்க முடியும்.

**போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது** – சிலபேர் நான்கு வருடமாக கட்டிலில் நோய்வாய்ப்பட்டு கிடப்பான். மரணம் வராமல் நித்தமும் கட்டிலோடு இவன் போராடிக் கொண்டிருப்பான். கட்டிலில் இப்படியும் அப்படியும் புரண்டு புரண்டு படுத்து, அம்மா அம்மா என்று அரற்றிக் கொண்டிருப்பான். இவன் பலமுறை இப்படி அரற்றுவதால் அவனை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் மனைவியை, பேத்தியை, மகளை கூப்பிடுவான். இப்படி கூப்பிட்டு கூப்பிட்டு அவர்களுக்கும் சலித்துப் போனது. இவன் நான்கு ஆண்டுகளாக கட்டிலில் நோய்வாய்ப்பட்டு கிடந்து குடும்பத்தினருக்கு சுமையாக இருப்பான். அவனைத்தான் **போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது** என்கிறார் மகான் பட்டினத்தார்.

பிறவித் துன்பத்தை நீக்குவதைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம். கடைசி காலத்தில், இரவு படுத்தால் விடிவதற்குள்ளே இறந்து போக வேண்டும். அதைத்தான் நல்ல இறப்பு என்பார்கள். அதுதான் பிரச்சனையில்லாத வாழ்வு. அந்த வாய்ப்பை பெறுவதற்கு நாம் பூஜை செய்ய வேண்டும்.

**போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது ஆர்ப்படுவா ரென்றே யறிந்திலையே நெஞ்சமே** – இந்த இரகசியத்தை அறிந்த மக்கள்தான், பிறரின் பசித்துன்பத்தை போக்குவார்கள். இதுபோன்று துன்பம் இல்லாதிருக்க பாக்களவாவது அன்னம் பசித்தோருக்கு ஈய வேண்டும். சிறிதளவாவது உணவு கொடுத்த தருமம், இவனுக்கு வருகின்ற நோயைத் தடுக்கும். நான்கு ஆண்டுகள் கட்டிலில் படுத்து கஷ்டப்படக் கூடாது.

மரணத்தை வென்ற மாமேதைகளான ஞானிகளின் பாதத்தைப் பற்றுகின்றவர்களுக்கு இதுபோன்ற நிலை வராது.

ஞானிகள் பிறவித் துன்பத்தை பொடியாக்கியவர்கள், ஊழ்வினையை அறுத்தெறிந்தவர்கள். அவர்கள் பாதத்தைப் பற்றினால் உண்மைப் பொருளை அறியலாம். ஞானிகள் தன்னிடமிருந்த இழிவு நிலைகளை நீக்கியவர்கள். பல கோடி ஜென்மங்களில் செய்த பாவங்களை, ஞானிகள் பாதத்தைப் பற்றி நீக்கிக் கொள்ளலாம். நம்முடைய ஊழை அகற்ற அவர்கள் பாதத்தை பற்றி பூஜை செய்ய வேண்டும், அதுவே உண்மையை உணர்விக்கும்.

**ஊழகற்றும் உண்மை உணர்விக்கும் ஞானியரின்**
**தாள்பற்றும் மக்களுக்குத் தான்.**

**– குருநாதர் அருளிய ஞானக்குறள் – குறள் எண் 2.**

இது நாங்கள் அருளிய ஞானக்குறள்.

தினமும் உள்ளம் உருக பூசித்த மக்களுக்கு கடைசி காலத்தில் நல்லபடியாக துன்பப்படாமல் இறப்பார்கள்.

இல்லையென்றால் நான்கு ஆண்டுகளாக இவனுக்கும் கட்டிலுக்கும் போராட்டம், இவனுக்கும் மனைவிக்கும் போராட்டம், இவனுக்கும் பிள்ளைகளுக்கும் போராட்டம். இவனுக்கும், உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் போராட்டம் என போராட்டமாகவே இருக்கக் கூடாது. இப்படியெல்லாம் துன்பப்படக் கூடாது.

இதற்கு முன்னே இவனிடம் மிகுந்த அன்புடன் வீட்டில் உள்ளவர்கள் பேசியிருப்பார்கள். இரவும் பகலும் ஐயோ ஐயோ என்று வலி தாங்காமல் இவன் அலறி அலறி துன்பத்தை கொடுத்ததால், இவன் எப்பொழுது இறப்பான் என்று வீட்டில் உள்ள எல்லோரும் ஏங்குவார்கள். ஆனால் இவன் இறக்க மாட்டான். இவனுடைய வினை முடியும்வரை கட்டிலோடு போராடிக் கொண்டிருப்பான், இறக்க மாட்டான்.

கட்டிலில் கிடக்கிறவன் முன்செய்த பாவத்தால் துன்பப்படுகிறான். ஆனால் அவன் மட்டும் துன்பப்படவில்லை, இவனால் வீட்டில் உள்ளவர்களும் துன்பப்படுகிறார்கள். வீட்டில் உள்ளவர்கள் அத்தனை பேரும் என்ன பாவம் செய்தார்கள்? இவனை கணவனாக அடைந்த பாவம் மனைவிக்கு, இவனை தந்தையாக அடைந்த பாவம் மகனுக்கு ஆகும், இவனை தாத்தாவாக அடைந்த பாவம் பேத்திக்கும் பேரனுக்கும் உண்டு. எனவே இவன் துன்பப்படுவதை பார்ப்பதே இவர்கள் செய்த பாவம். இதனால் நான்கு ஆண்டுகள் குடும்பத்தில் உள்ளவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

பல ஜென்மங்களில் செய்த பாவம் தீராத நோயாக வரும். அந்த தீராத நோயை நீக்குவதற்கு தான், **ஊழகற்றும் உண்மை உணர்விக்கும்** ஞானிகளின் திருவடியை பூஜை செய்ய சொன்னோம். முன் செய்த தீவினை நீங்கும், அதுமட்டுமல்ல உண்மையை உணர்விக்கும். இது நாங்கள் சொன்னது.

முன்ஜென்மத்தில் செய்த கொடும் பாவத்தை நீக்கும், உண்மைப் பொருளை உணர்விக்கும், ஞானியரின் தாள்பற்றும் மக்களுக்குத் தான் என்று நாங்கள் சொல்லியுள்ளோம்.

ஞானிகளின் தாள் பற்றும் மக்களுக்கு, முன் செய்த வினை நீங்கும். அறிய முடியாத, பிறர் உணரமுடியாத, சிந்திக்க முடியாத, தொட்டுப் பார்க்க முடியாத, பிறர் அணுக முடியாத ஒன்றை அறிய முடியும். ஞானிகளின் தாளை பற்றும் மக்களுக்கு ஊழகற்றும் உண்மை உணர்விக்கும் என்று நாங்கள் சொல்லியுள்ளோம். தாள் – திருவடி, பாதம்.

சான்றோரின் மகனாக இருந்தால், அதை பெருமையாக சொல்வான். அதுவே ஒரு திருடனின் மகனாக இருந்தால், நான் திருடனின் மகன் என்று பெருமையாக சொல்வானா?

**தாழ்வகலும் தர்மம் தழைத்தோங்கும் நமக்கு**
**வாழ்வளிக்கும் ஞானியரின் வழிபாடே.**

**– குருநாதர் அருளிய ஞானக்குறள் – குறள் எண் 4.**

ஒருவனுடைய தந்தை பெருமைக்குரியவனாக இருந்தால், சபையில் இன்னாரின் மகன் என்று சொல்வான்.

ஒருவனுடைய தந்தை கொலை செய்து விட்டு சிறையில் இருந்தால், நான் இன்னாரின் மகன் என்று எப்படி சொல்ல முடியும்?

தந்தை குடிப்பழக்கம், சூதாடும் பழக்கம், பொதுமகளிரிடம் செல்லும் பழக்கம் உள்ளவன், பொருளை விரயமாக்கி குடும்பத்தை கடன் சுமையில் தள்ளியிருப்பான். அதுமட்டுமல்ல அவனுடைய மகனையும் தலைகுனியும்படி செய்திருப்பான்.

தந்தை சிக்கனத்தை கடைப்பிடிக்காமல் வீண் ஆரவார செலவு செய்வான். இதனால் பெரிய கடன் சுமைக்கு மகனை ஆளாக்கிவிடுவான்.

**தாழ்வகலும்** – ஞானியர் வழிபாடு மட்டுமே, தந்தையினால் ஏற்பட்ட இழிபெயரை நீக்கிவிடும்.

தந்தை குற்றவாளியாக இருக்கலாம், பல இடங்களில் கடன் வாங்கி ஏமாற்றியிருக்கலாம். இதனால் அவனுடைய மகனை எல்லோரும் இகழ்ந்து பேசுவார்கள். அவனுடைய மகன் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றினால் இதிலிருந்து விடுபடலாம். அதைத்தான் **தாழ்வகலும்** என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

**தாழ்வகலும் –** முன்னோர்களால் ஏற்பட்ட தாழ்வு, இழிபெயர், கெட்டபெயர் அகலும்.

இவனுடைய குடும்பம் ஊரை ஏமாற்றிவிட்டது. இவனுடைய தந்தை கொலைக் குற்றம் புரிந்தவனாக இருப்பான். இப்படி பல்வேறு வகையான குற்றம் செய்த பரம்பரையில் வந்தாலும் சரி, ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் அந்த இழிவு அகலும், இவனுக்கு பெருமை சேரும். முன்னோர்கள் செய்த பாவத்தினால் வந்த அத்தனை கஷ்டங்களும் நீங்கும்.

**தர்மம் தழைத்தோங்கும் –** ஆசான் அகத்தீசர் தர்மத்தின் தலைவன். அறக்கடலாகிய ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் இவனுக்கு தர்மசிந்தனை வரும். தர்மம் தழைத்தோங்க ஞானிகள் வழிபாடுதான் சரியான வழி என்பதை நாங்கள் சொல்லியுள்ளோம். ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் இவ்வளவு பெருமைகள் உண்டாகும்.

ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் முன்னோர்கள் செய்த பாவங்கள் நீங்கும், மேலும் தர்மம் செய்யக் கூடிய சிந்தனை வரும் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

ஞானிகளெல்லாம் பிறவியைப் பற்றிய இரகசியத்தை அறிந்த மக்கள், தன்னுள்ளே தலைவனைக் கண்ட மக்கள். தலைவன் அன்பு கடலாக இருப்பார், பிறவித் துன்பத்தை ஒழிக்கக் கூடியவர், கேட்டதெல்லாம் தரக் கூடியவர்.

**வேண்டும் வரங்கொடுக்கும் வேட்கை தவிர்க்கும்**
**யாண்டும் பற்றி நீபார்.**

**– குருநாதர் அருளிய ஞானக்குறள் எண் 1.**

நீ எதை விரும்புகின்றாயோ அத்தனையும் தருவார்கள். அதுமட்டுமல்ல மனிதனை வஞ்சிக்கக் கூடிய ஆசையையும் நீக்கிவிடுவார்கள்.

**அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை**
**வஞ்சிப்பது ஓரும் அவா.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 366.**

ஒருவனை வஞ்சிப்பது அவா என்னும் ஆசைதான் என்று மகான் திருவள்ளுவர் சொல்கிறார்.

ஞானிகள் அனைவரும் ஐயப்பாடு இல்லாமல் உண்மைப் பொருளை துல்லியமாக கண்டறிந்த மக்கள்.

எங்களிடம் ஒருவன் வரும்போதே அவன் யார், அவனுடைய தகுதி என்ன என்பது எங்களுக்குத் தெரியும். ஐயப்பாடு இல்லாமல் நாங்கள் கற்றதாலே எங்களிடம் தெளிவு இருக்கும்.

நாங்கள் அடைந்த பேரின்பத்தை நீங்களும் அடைவதற்காக ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றுங்கள். நாங்கள் முன்னேறிவிட்டோம், நீங்களும்

ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றினால் முன்னேறலாம் என்று நாங்கள் சொல்வோம். எடுத்தப் பிறவியை வீணாக்காமல் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்ற வேண்டும்.

நூலறிவு, கல்வியறிவு உள்ளவர்கள், ஆசான் பாதத்தைப் பற்றாமல் ஞானத்தைப் பற்றி அறிய முடியாது. எங்களிடமிருந்து உயிரைப் பற்றிய இரகசியத்தையும், உடம்பைப் பற்றிய இரகசியத்தையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். திருக்குறளைப் படித்தாலே சரியை, கிரியை மார்க்கத்தை அறியலாம்.

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்.**

**– திருக்குறள் – ஊழ் – குறள் எண் 373.**

உண்மைப் பொருளை துல்லியமாக உணர்த்தக் கூடிய நுண்ணிய நூலை கசடறக் கற்ற போதிலும், அவனவன் ஊழ்வினைக்கேற்றார் போல்தான் அவனவனுக்கு உணர்த்தப்படும். நாங்கள் ஐயப்பாடு இன்றி கற்றதாலே, நாங்கள் திருக்குறளை கற்று அறிந்ததுபோல், வேறு யாராலும் அறிய முடியாது. நாங்கள் எப்படி இந்த ஆற்றலைப் பெற்றோம் என்றால், நானூறு லாரி நூல்களை ஒரு நொடிப்பொழுதில் கற்கக் கூடிய ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றியதால் இந்த ஆற்றலைப் பெற்றிருக்கிறோம்.

நானூறு லாரி நூல்களை ஒரு நொடிப் பொழுதில் கற்கக் கூடிய ஆற்றலை ஆசான் எனக்கு வாசி நடத்திக் கொடுத்ததால் நாங்கள் அந்த ஆற்றலைப் பெற்றிருக்கிறோம். நீங்களெல்லாம் இதுபோன்ற பெருமைகளையுடைய ஞானிகளின் பாதத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அறிய முடியாத, உணர முடியாத, சிந்திக்க முடியாத, அணுக முடியாத ஒன்றை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். இதுதான் நாங்கள் காட்டுகின்ற துல்லியமான பாதை.

பள்ளிக்கூடம் செல்லாத எனக்கு இவ்வளவு பெரிய ஆற்றலை ஆசான் தந்திருக்கிறார். நாங்கள் அடைந்த பேரின்பத்தை, மற்றவர்களும் அறிந்து அடைவதற்காகத்தான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் ஒரு நாளும் பள்ளிக்கூடத்திற்கு போகவில்லை. இந்தக் கல்வியை எனக்கு தந்தது ஆசான் அகத்தீசர்தான்.

முன்செய்த தீயவினையின் காரணமாக மனிதவர்க்கம் மேல்நோக்கி போகமுடியாமல் தடுமாறுகிறது. நாங்கள் தொடர்ந்து ஞானிகளின் பெருமைகளை பேசி, எல்லோரும் நிலை உயர வேண்டுமென்று பாடுபடுகின்றோம். நாங்கள் கருணை கொண்டு உங்களுக்கு உபதேசிக்கிறோம். முற்றுப்பெறுவதற்காகத்தான்

மனிதவர்க்கம் தோன்றியிருக்கிறது. நாங்கள் தொடர்ந்து உங்களுக்காகத்தான் ஞானிகளின் பெருமைகளை பேசிக் கொண்டு வருகிறோம். நீங்களெல்லாம் நிலை உயர வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். விடாதே பிடி, தினமும் பூஜை செய், அன்னதானம் செய் என்று தொடர்ந்து ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்போம். இதுதான் பாதை என்று உங்களுக்கு தெளிவாக சொல்லிவிட்டோம்.

எங்களிடம் ஒருவன் வந்து, முன்னேற வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன், இதற்கு உபாயம் ஒன்று சொல்லுங்கள் என்று கேட்டால் நாங்கள் உங்களுக்கு சொல்வோம். விரும்பிக் கேட்டால் நாங்கள் ஞானிகள் பாதத்தை சுட்டிக்காட்டுவோம். சொல்ல வந்தவனிடம் நாங்கள் பேசமாட்டோம், கேட்க வந்தவனிடம் மட்டும்தான் நாங்கள் பேசுவோம்.

எங்களுக்கு வாசி வசப்பட்டுள்ளதால், எல்லா மொழிகளையும் நாங்கள் பேசுவோம். ஆசான் அகத்தீசர் பாதத்தை உறுதியாக நாங்கள் பற்றியதால், இந்த வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. நீங்களும் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றி பூஜித்து முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

–சுபம்–

## முருகன் திருவடி வாழ்க

## துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

## உலக நன்மைக்காக அவதரித்தவர் முருகப்பெருமான்
## ஞானசித்தர் காலம் வருகையும் தொண்டர் பங்கும் குறித்த
# மகான் சுப்பிரமணியர் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

15.08.2020, சனிக்கிழமை

1. ஆறுமுகன் என் அவதார சூட்சுமமே
அறமாக வரமாக வந்த அரங்கனே
தருமசக்தி கொண்டு கலியுகத்தை மாற்ற
தண்டாயுதன் என்சக்தியாய் வந்த தேசிகனே

2. தேசிகனே உலக நலம் கருதி
திருவடி பற்றி ஆறுமுகன் என்பால் கேட்க
ஆசி அறிவுரையாக சார்வரி நள்ளி திங்களில்
அருளுவேன் ஞானசித்தர் ஆட்சிகாலம் வருகை குறித்தும்

3. குறிப்பாக அதில் ஓங்காரக்குடிலின் தொண்டர்கள்
குருராசன் உன் தயவால் பங்களிப்பு தருகின்ற
தெரிவிப்பேன் வாய்ப்பும் அவர்கட்கு உண்டான ஆசியும்
வழங்கியே சுப்பிரமணியர் யானும் அருளுவேன்

4. அருளினேன் இதற்குமுன் ஆசி தன்னில்
அறமும் அரங்கன் கொள்கைகளும்
வரமென உலகமக்கள் ஏற்றால்தான்
வையகம் உலகமாற்றம் பெறும் என்று கூறினேன்

5. கூறியபடி இதுகாலம் அரங்கன் தொடர்ந்துகேட்க
குவலயத்தில் ஞானசித்தர் ஆட்சிகாலம் குறித்த
அறிவிப்பேன் வருகைக்கான ஆசி அறிவுரையாய்
அரங்கன் தர்மம் உலகமெங்கும் பரவக்கண்டேன்

6. கண்டதொரு இந்த சேவை வளரவே
கலியின் துன்பங்கள் தானாக ஓடுமப்பா
தொண்டர்களும் மனம் உருகி வேண்டக்கண்டேன்
தேசிகன் உன்பால் விசுவாசம் மிகுதிகூட்டி

7. கூட்டியே குரு அருள்வழிதான் மாற்றம்
குறையில்லா நடந்தேறும் எனும் சரணாகதியை
தட்டாது உன் தொண்டர்கள் ஏற்க கண்டேன்
தர்மத்தால் தொண்டர்கள் எல்லாம் தவபலம் கூடிவர

8. வருகவே ஓங்காரக்குடிலின் தொண்டர்படை
வையகத்தில் வளர்ச்சி கண்டு வருகுதப்பா
தர்மபலத்தால் எந்தன் சக்தி பெற்று
தவராசன் தொண்டர்கள் எல்லாம் முழுமைகாண

9. காணுகின்ற அற்புதம் அரங்கஞானி உன்
கருணையால் பரிபூரணமாய் நடந்து வருகுதப்பா
தொண்டர்களைக் கொண்டே இந்த மாற்றம் உறுதிஉறுதி
தேசிகன் நீ வைராக்கியமாகக் கொண்டு அவதரித்த

10. அவதரித்த ஞானசித்தர் ஆட்சி காண
ஆளுமை காலம் நெருங்கி வருகுதப்பா
புவனமதில் அரங்கன் உன் தொண்டர் மூலமே
புண்ணியலோகமாக உலகம் மாற்றம் பெற்று

11. பெற்றுமே எண்ணப்பட அரங்கன் வேண்டல்பட
பிரணவ சக்தியாக ஆறுமுகன் யான்
ஆற்றல்கூட்டி உன் தொண்டர்கள் மூலமே
அளவில்லா நீ செய்கின்ற தர்மத்தின் மூலமே

12. மூலமே உலகமாற்றம் செய்து
முழுமையான ஞானசித்தர் ஆட்சி காலத்தை
கோலமதாய் சுப்பிரமணியர் யானும் துவக்குவேன்
கூறிவிட்டேன் வரும் சட்டமன்ற தேர்தல் காலம்

13. காலமதும் இந்த புண்ணியமும் தொண்டர் பெருமக்கள்
கருணைமிகுந்த சேவையின் வளர்ச்சி மூலம்
துணிவுபட சுப்பன்யான் மாற்றத்தை
தேசிகன் நீ வேண்ட நடத்தியருள்வேன்

14. அருள்பெற அரங்கன் தொண்டர் படைகளுக்கு
ஆறுமுகன் யான் ஆக்கம் தந்துவழி நடத்துகின்றேன்
பொருள் வளமோடு தொண்டர்களுக்கு புண்ணிய பலமும் கூட்டி
புதுமையாக்கி தொண்டர்களை ஊக்குவித்து வழி நடத்துகின்றேன்

15. நடத்துகின்ற அரங்கன் உன்சேவையே
ஞானமாக நல்ல தர்மமாக எங்கும் பரவி
இடர் என்கின்ற நடப்பின் பேரிடரை விரட்டி
எங்கும் உயிர் பாதுகாப்பு தந்து

16. தந்துமே உலகமக்களைக் காத்து
தவசி உன் பிரணவக் குடிலின் சக்தி
சிந்தைகலந்து உலகோர் யாவருமே
செபமாக ஆறுமுக அரங்கா எனும் நாமம்

17. நாமஜெபம் கூட்டுகின்ற சக்தியாக மாற
ஞானசித்தர் ஆட்சிகால வருகை
நேமமுடன் சட்டமன்ற தேர்தல் களம் பின்னே
சத்திய தர்ம ஞானமிக்க ஆட்சிகாலமாக

18. ஆகவே தர்மவான்கள் கூட்டணிகளோடு
ஆன்மீக உண்மைத் தொண்டர்கள் பதவிக்குவர
வகைபட தமிழகம் தொட்டு மாற்றம்
வந்துமே பாரதம் முழுக்க பரவி

19. பரவிபின் பாருலகை மாற்றுகின்ற
பரோபகாரம் கொண்ட ஜீவகாருண்ய ஞான ஆட்சி
துறவி மாதவசி அரங்கன் அவதரித்த
திருவருளாக ஆறுமுகன் என்னருள்பட நடந்தேறும்

20. நடந்தேறும் ஞானவான்களுக்கு பாதுகாப்பு
நல்லொழுக்கம் தர்மநீதி நிறைந்த
நடந்தேறும் இவர்கட்கெல்லாம் பாதுகாப்பு
ஞானசித்தர் ஆட்சி காலம் தொட்டு

21. தொட்டுமே கலித்துன்பங்கள் விலகும்
தீதான சகலகொடுமைகளும் அகன்றோடி
வாட்டமில்லாத ஊழலில்லாத ஆட்சியாக
வளமான இயற்கைபலம் நிறைந்த

22. நிறைந்த நல்ஞானிகள் துணைகொண்ட
நிகழ்த்துவேன் நிலஅன்னை மகிழும்படி (பூமாதேவி மகிழும்படி)
பலமான ஞானசித்தர் ஆட்சிகாலம்
பிரணவக்குடில் தொண்டர்கள் பங்களிப்போடு வலம் வரும்

23. வலம் வரும் அரங்கனின் ஞானசபை
வளம் தரும் அரங்கனின் தர்மக்கொள்கை
பலமான இந்த ஞானசித்தர் ஆட்சி காலத்தை
பாருலகில் ஆறுமுகன்யான் தயவாக அரங்கேற்றுவேன் ஆசி அறிவுரை முற்றே.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**
என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.
- மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

## நச்சுக்கிருமி தாக்காமல் நம்மைக் காத்துக் கொள்ள!

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.**

**– திருமந்திரம் – புலால் மறுத்தல் – கவி எண் 199.**

சைவ உணவுகள், கீரை வகைகள், தானியங்கள், நாட்டு வகை காய்கறிகள், ஆங்கில காய்கறிகள், உயர் ரக பருப்பு வகைகளான பாதாம், பிஸ்தா, முந்திரி, பூமியின் அடியில் உள்ள கிழங்கு வகைகள், பழ வகைகள் போன்ற உணவுகளெல்லாம் கடவுளின் அருளால் நமக்கு கிடைக்கின்றது. இதுபோன்ற சைவ உணவுகள் மிகுதியாக கிடைத்தாலும் இது போதாதென்று சுவைக்காக உயிர்க்கொலை செய்து புலாலை உண்ணுவதால்தான் நச்சுக்கிருமிகளும் நோய்களும் மனிதர்களை தாக்குகின்றன. இதைப் புரிந்து கொண்டு உயிர்க்கொலை தவிர்த்து, புலால் (அசைவ உணவுகள்) மறுத்து வாழ்பவர்களை நச்சுக்கிருமிகளும், நோய்களும் தாக்காது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்.**

**– திருக்குறள் – புலால் மறுத்தல் – குறள் எண் 251.**

சிறிதும் கருணையில்லாது, ஜீவகாருண்ய சிந்தனையில்லாது, தன்னுடைய நாவின் சுவைக்காகவும், உடல் வளர்ப்பிற்காகவும் புலாலை (அசைவ உணவுகள்) உண்பவர்கள் நிச்சயமாக கடவுளின் ஆசியை பெறவே முடியாது. தினம்தினம் என்னென்ன நோய் வருமோ என்று அச்சத்தோடு நிம்மதியில்லாமல்தான் வாழ வேண்டும். கடவுளின் ஆசியை பெறுவதற்கு இவர்களுக்கு வாய்ப்பே இல்லை.

மகான் திருமூலரும், மகான் திருவள்ளுவரும் இயற்றிய பாடல்களில் சொன்ன கருத்துகளைதான் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்.

**குறிப்பு – உயிர்க்கொலை செய்யாது புலால் மறுப்பவர்களுக்கு மட்டும்தான் தலைவன் முருகப்பெருமான் வாசி நடத்திக் கொடுப்பார்.**

## முருகன் திருவடி வாழ்க

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.


குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | பிரசன்னக்குமார், மணப்பாறை | 74022 72216 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |
| 18. | மலர்க்கொடி, வேலூர் | 99521 15654 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆவணி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, ஆவணி மாதம் 16ஆம் தேதி,**

**01.09.2020 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## புரட்டாசி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, புரட்டாசி மாதம் 15ஆம் தேதி,**

**01.10.2020 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**
**ஓங்காரக்குடில், துறையூர்.**
செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.

செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை, DD - வரைவோலை, MO - பணவிடை

**GOOGLE PAY**

Mobile No - 90956 33344.

UPI CODE - kudilbooks@okhdfcbank

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

பணம் அனுப்பியவுடன் 90956 33344 என்ற செல் எண்ணிற்கு தகவல் தெரிவக்கவும்.

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :
96882 78666, trustkudil@gmail.com

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

எடுத்தெடுத்து உதவினும் என்றும் குறையாது
அடுத்தடுத்து ஓங்குமெய் அருளுடைப்பொன்னே
தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
கிளர்ந்திட உரைத்துக் கிடைத்த செம்பொன்னே
எண்ணிய தோறும் இயற்றுக என்றெனை
அண்ணி என்கரத்தில் அமர்ந்தபைம் பொன்னே
நீகேண் மறக்கினும் நின்னையாம் விட்டுப்
போகேம் என எனைப் பொருந்திய பொன்னே
எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
பண்ணிய தவத்தால் பழுத்த செம்பொன்னே

**ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு**

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.

Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

## திருக்குறள்

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________

முகவரி : ______________________

______________________

ஊர் : ______________ பின்கோடு ______________

வட்டம் : ______________ மாவட்டம் ______________

தொலைபேசி : ______________ (கைபேசி) ______________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்